# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-11** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : விஜயானந்த் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 06th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

முதல் விசாரணை

நான் தற்போது வெள்ளியணை கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். நான் கடந்த 18.12.2020 அன்று புகளூர் வட்டம், புஞ்சைபுகளூர் வடக்கு கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வந்தேன்.

அப்போது சாட்சி தனலெட்சுமி எனது உதவியாளராக பணிபுரிந்து வந்தார். அன்றைய தினம் அதிகாலை 5.35 மணிக்கு வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்திலிருந்து எனக்கு போன் செய்து, வேலாயுதம்பாளையம் கா.நி.கு.எண். 778/2020 வழக்கு சம்பவ இடத்தை பார்வையிடுவது சம்மந்தமாக என்னை வரச்சொன்னார்கள். அதன்பேரில் நான் என் உதவியாளரை அழைத்துக்கொண்டு, வேலாயுதம்பாளையம், மூலிமங்கலம் பிரிவில் உள்ள 91 காபி கபே என்ற கடை முன்பு காலை 6.00 மணிக்கு சென்றேன். அங்கு வேலாயுதம்பாளையம் காவல் ஆய்வாளர் என் முன்னிலையிலும், என் உதவியாளார் சாட்சி தனலெட்சுமி முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தார். அந்த பார்வை மகஜரில் நானும், என் உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2. சம்பவ இடத்தில் கிடந்த இரத்தம்படிந்த மண், இரத்தம் படியாத மண், கருப்பு வெள்ளை நிற உட்லேண்ட் செருப்பு ஒரு ஜோடி, பிரவுன் நிற செருப்பு ஒரு ஜோடி, TN 45 BB 5151 என்ற பல்சர் இருசக்கர வாகனத்தையும், அறுந்த நிலையில் கீழே கிடந்த தங்க செயின் ஒன்றையும் ஆய்வாளர் மகஜர் தயாரித்து, கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நாங்கள் கையொப்பம் செய்தோம். அந்த மகஜர் என்னிடம் காட்டப்படுவது. அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3. இரத்தம்படிந்த மண் சா.பொ.1, இரத்தம் படியாத மண் சா.பொ.2, கருப்பு வெள்ளை நிற உட்லேண்ட் செருப்பு ஒரு ஜோடி சா.பொ.3, பிரவுன் நிற VKC செருப்பு ஒரு ஜோடி சா.பொ.4, TN 45 BB 5151 என்ற பல்சர் இருசக்கர வாகனம் சா.பொ.5, அறுந்த நிலையில் கீழே கிடந்த தங்க செயின் ஒன்று சா.பொ.6. போலீசார் கைப்பற்றிய தங்க செயின் என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது. அந்த புகைப்படம் அ.சா.ஆ.4.

பின்னர் 23.12.2020 அன்று மதியம் 12.35 மணிக்கு வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்திலிருந்து போன் செய்து, இதே வழக்கு சம்மந்தமாக சேலம் பைபாஸ் ரோடு, வேலாயுதம்பாளையம் பஸ்டாப் அருகே

வருமாறு தெரிவித்தார்கள். அதன்பேரில் நானும், என் உதவியாளரும் 12.45 மணிக்கு சேலம் பைபாஸ் ரோட்டிற்கு சென்றோம். அங்கு இவ்வழக்கு சம்மந்தமாக மணிகண்டன் (எ) மணி, சீனு (எ) சீனிவாசன் ஆகியோரை போலீசார் பிடித்து வைத்திருந்தனர். ஆய்வாளர் 12.45 மணிக்கு மணி (எ) மணிகண்டனை விசாரித்தார். அவர் தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் மடிக்கணிணியில் பதிவு செய்து, பின்னர் காவல்நிலையத்திலிருந்து அதை பிரிண்ட் எடுத்துக்கொண்டு வந்தனர். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மணி (எ) மணிகண்டன் கையொப்பம் செய்தார். அதில் நானும், என் உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். பின்னர் சீனு (எ) சீனிவாசன் என்பவரையும் ஆய்வாளர் விசாரித்தபோது, அவர் தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் மடிக்கணிணியில் பதிவு செய்து, பின்னர் காவல்நிலையத்திலிருந்து அதை பிரிண்ட் எடுத்துக்கொண்டு வந்தனர். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சீனு (எ) சீனிவாசன் கையொப்பம் செய்தார். அதில் நானும், என் உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். பின்னர் எதிரிகள் மணி (எ) மணிகண்டனும், சீனு (எ) சீனிவாசனும், ஒப்புதல்வாக்குமூலத்தில் சொன்னபடி, மூர்த்திபாளையம், ஏழு கன்னிமார்கோயில் எதிரில் உள்ள முட்புதருக்கு அழைத்துச்சென்று, அங்கு மறைத்து வைத்திருந்த சூரி கத்தியை மணி (எ) மணிகண்டன் எடுத்து ஆய்வாளரிடம் ஆஜர் செய்தார். எதிரி மணி (எ) மணிகண்டன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.5. மணி (எ) மணிகண்டன் ஆஜர் செய்த கத்தியை ஆய்வாளர் மகஜர் தயாரித்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.6. போலீசார் கைப்பற்றிய கத்தி சா.பொ.7.

பின்னர் சீனு (எ) சீனிவாசன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7. எதிரி சீனு (எ) சீனிவாசன் மறைத்து வைத்திருந்த கத்தியை ஆய்வாளரிடம் எடுத்து ஆஜர் செய்தார். அதை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல்

மகஜர் அ.சா.ஆ.8. போலீசார் கைப்பற்றிய கத்தி சா.பொ.8.

பின்னர் 18.02.2021 அன்று இதே வழக்கு சம்மந்தமாக உதயநிதி (எ) சூர்யாவை கைது செய்து, காவல்நிலையத்தில் வைத்திருப்பதாகவும், அது சம்மந்தமாக காவல்நிலையத்திற்கு வருமாறும் கூறினார்கள். அதன்பேரில் மதியம் 3.15 மணிக்கு நானும், என் உதவியாளர் தனலெட்சுமியும் வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்திற்கு சென்றோம். அங்கிருந்த உதயநிதி (எ) சூர்யா என்பவரை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் விசாரித்தபோது, அவர் தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை மடிக்கணிணியில் பதிவு செய்து, காவல்நிலைத்தில் பிரிண்ட் எடுத்ததில், எதிரி அதில் கையெழுத்திட்டார். அதில் நானும், என் உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். பின்னர், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி, எதிரி உதயநிதி (எ) சூர்யா மூர்த்திபாளையம், ஏழு கன்னிமார்கோயில் எதிரில் உள்ள முட்புதருக்கு அழைத்துச்சென்று, அங்கு அவர் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து ஆய்வாளரிடம் ஒப்படைத்தார். அதை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். எதிரி உதயநிதி (எ) சூர்யா அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்ப்பட்ட பகுதி அ.சா.ஆ.9. எதிரி ஒப்படைத்த கத்தியை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.10. போலீசார் கைப்பற்றிய கத்தி சா.பொ.9.

இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1, 4, 5 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் இன்று வழக்கறிஞர் திரு.சுந்தர்ராஜன் அவர்கள் எதிரிகளுக்காக வக்காலத்து தாக்கல் செய்துள்ளார். எதிரிகள் தரப்பில் முன்னிலையாகியுள்ள இளநிலை வழக்கறிஞர் திரு.அரவிந்த் அவர்கள், கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் வேறு வழக்கில் முன்னிலையாகியுள்ளார் எனவும், குறுக்குவிசாரணையை ஒத்தி வைக்க வேண்டும் என காலஅவகாசம் கோருகிறார். குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு

வாசகத்தின்படி மூத்தவழக்கறிஞர் வேறு வழக்கில் ஆஜராவது, வழக்கை ஒத்தி வைப்பதற்கான போதிய காரணம் இல்லை என்பதால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-12** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வராஜ் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 06th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

முதல் விசாரணை

நான் புஞ்சைத்தோட்டக்குறிச்சியில் வசித்து வந்து, விவசாய கூலி வேலை செய்கிறேன். சாட்சி தங்கமணி என் நண்பர். கடந்த 2020 ம் வருடம் தோட்டக்குறிச்சி மலையம்மன் கோவிலுக்கு நானும், என் நண்பர் தங்கமணியும்

சென்றிருந்தோம். அங்கு போலீசார் வந்து எங்களிடம் கையெழுத்து போடுமாறு கேட்டார்கள். நாங்கள் இருவரும் கையெழுத்து போட்டுக்கொடுத்தோம். என்ன காரணத்திற்காக கையெழுத்து போட்டோம் என்று எனக்கு தெரியாது. அப்போது போலீசாருடன் வேறு யாரும் இல்லை. என்னிடம் காட்டப்படும் 6ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது. என்னுடைய கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.11. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது. என்னுடைய கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.12.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

போலீசார் விசாரணையில், கடந்த 21.12.2020 அன்று மதியம் சுமார் 13.30 மணிக்கு தோட்டக்குறிச்சி மலையம்மன் கோவிலில் சாமி கும்பிட்டு விட்டு, நானும், என் நண்பர் தங்கமணியும் வெளியே வந்தபோது, வேலாயுதம்பாளையம் போலீசார் இவ்வழக்கின் 6ம் எதிரி கிரி (எ) கிரிதரனை கைது செய்து வைத்திருந்தனர் என்றும், அப்போது ஆய்வாளர் அவரை விசாரித்தபோது, எதிரி எங்கள் முன்னிலையில் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் கணிணியில் பதிவு செய்து, பிரிண்ட் எடுத்ததில், எதிரி கையெழுத்து செய்தார் என்றும், அதில் நாங்கள் சாட்சி கைொயப்பம் செய்தோம் என்றும், பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னபடி, எதிரி ஆஜர் செய்த ஸ்கூட்டி வாகனத்தை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் 15.15 மணிக்கு கைப்பற்றினார் என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-13** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : தங்கமணி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 06th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

முதல் விசாரணை

நான் புஞ்சைத்தோட்டக்குறிச்சியில் வசித்து வந்து, விவசாய கூலி வேலை செய்கிறேன். அ.சா.12 செல்வராஜ் என் நண்பர். சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர், தோட்டக்குறிச்சி மலையம்மன் கோவிலுக்கு நானும், என் நண்பர்

செல்வராஜும் சென்றிருந்தோம். அங்கு போலீசார் வந்து எங்களிடம் கையெழுத்து போடுமாறு கேட்டார்கள். நாங்கள் இருவரும் கையெழுத்து போட்டுக்கொடுத்தோம். என்ன காரணத்திற்காக கையெழுத்து போட்டோம் என்று எனக்கு தெரியாது. அப்போது போலீசாருடன் வேறு யாரும் இல்லை. என்னிடம் காட்டப்படும் 6ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது. என்னுடைய கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.13. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது. என்னுடைய கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.14.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

போலீசார் விசாரணையில், கடந்த 21.12.2020 அன்று மதியம் சுமார் 13.30 மணிக்கு தோட்டக்குறிச்சி மலையம்மன் கோவிலில் சாமி கும்பிட்டு விட்டு, நானும், என் நண்பர் செல்வராஜும் வெளியே வந்தபோது, வேலாயுதம்பாளையம் போலீசார் இவ்வழக்கின் 6ம் எதிரி கிரி (எ) கிரிதரனை கைது செய்து வைத்திருந்தனர் என்றும், அப்போது ஆய்வாளர் அவரை விசாரித்தபோது, எதிரி எங்கள் முன்னிலையில் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் கணிணியில் பதிவு செய்து, பிரிண்ட் எடுத்ததில், எதிரி கையெழுத்து செய்தார் என்றும், அதில் நாங்கள் சாட்சி கைொயப்பம் செய்தோம் என்றும், பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னபடி, எதிரி ஆஜர் செய்த ஸ்கூட்டி வாகனத்தை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் 15.15 மணிக்கு கைப்பற்றினார் என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை என தெரிவித்தனர்.

**3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**(Chapter XXIII Code of Criminal Procedure)**</u>

<u>**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**</u>

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-14** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : நவீன்குமார் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 06th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் வேலாயுதம்பாளையம், காந்திநகரில் குடியிருந்து, கொத்தனார் வேலை செய்து வருகிறேன். நான் என் அண்ணன் சுரேஷ் என்பவரிடம் கொத்தனாராக கூலி வேலை செய்கிறேன். இருசக்கர வாகனத்தின் பதிவு எண்.

TN 48 J 1796 என்ற ஸ்பிளண்டர் வாகனத்தை வைத்திருந்தேன். அந்த வாகனத்தை மாயவன் என்ற பைனான்சியரிடமிருந்து அந்த இருசக்கர வாகனத்தை விலைக்கு வாங்கினேன். அந்த வாகனத்திற்கு பெயர் மாற்றம் செய்யாமல் வைத்திருந்தேன். நான் வேலாயுதம்பாளையம் பைபாஸ் கல்யாண மண்டபத்தை ஒட்டி வீடு கட்டும் கட்டுமான வேலை செய்துக்கொண்டிருந்தேன். அப்போது என் அண்ணன் என்னிடம் வேலை பார்க்கும் நபர் இருசக்கர வாகனம் கேட்கிறார், சாவி தருமாறு கூறினார். நான் இருசக்கர வாகனத்தின் பெட்ரோல் சீட் கவரில் சாவி உள்ளது என கூறினேன். வேலை பார்த்துக்கொண்டிருந்த நபர்களில் ஒருவர் வண்டியை எடுத்துச்சென்றார். அன்றைய தினம் என் அண்ணன், பக்கத்து வீட்டைச்சேர்ந்த கார்த்திக், குமரன், சதீஸ் ஆகியோர் வேலை பார்த்தனர். அதன்பிறகு, என் இருசக்கர வாகனம் என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் என் வாகனம் உள்ளது என்று சொன்னார்கள்.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

எதிரி பிரசாந்த் என்பவர் எனக்கு தெரியும். அவர் என் வீட்டு பக்கத்தில் வசிக்கிறார். அவர் எப்போதாவது என்னுடன் வேலைக்கு வருவார். வேலைக்கு வரும்போது வெளியே கடைக்கு செல்வதற்கு என் இருசக்கர வாகனத்தை வாங்கிச்செல்வார். 17.12.2020 அன்று மதியம் நான் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது, என் அண்ணனிடமிருந்து என் இருசக்கர வாகனத்தின் சாவியை எதிரி பிரசாந்த் என்பவர் வாங்கிச்சென்றார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>1, 4, 5 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1, 4, 5 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையாகி, மூத்த வழக்கறிஞர் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் வேறு வழக்கில் முன்னிலையாகியுள்ளார் எனவும், குறுக்குவிசாரணையை ஒத்தி வைக்க வேண்டும் என காலஅவகாசம் கோருகிறார். குவிமுச பிரிவு 309 2வது விலக்கு வாசகத்தின்படி மூத்தவழக்கறிஞர் வேறு வழக்கில் ஆஜராவது, வழக்கை ஒத்தி வைப்பதற்கான போதிய காரணம் இல்லை என்பதால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**<u>3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் வழக்குக்கோப்புகளை படித்து, சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய காலஅவகாசம் தேவை எனவும், சாட்சி குறுக்கு விசாரணை செய்வதற்கு ஒத்தி வைக்க வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்படாமல், தள்ளுபடி செய்யப்பட்டது. குவிமுச பிரிவு 309 2வது விலக்கு வாசகத்தின்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-15** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : மாயவன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 06th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

முதல் விசாரணை

நான் கொடுமுடி சாலையில் உள்ள செல்வநகரில் வசித்து வந்து, பழைய வாகனங்களை வாங்கி, விற்பனை செய்யும் தொழில் செய்கிறேன். அ.சா.14 நவீன்குமார் என்னிடம் ஸ்பிளண்டர் வாகனத்தை வாங்கியவர். TN 48 J 1796

என்ற ஸ்பிளண்டர் வாகனத்தை என்னிடமிருந்து 07.02.2020 தேதியில் அ.சா.14 நவீன்குமார் விலைக்கு வாங்கினார். மேற்சொன்ன வாகனத்தை நான் சதீஸ்குமார் என்பவரிடமிருந்து வாங்கி, நவீன்குமாருக்கு மறுவிற்பனை செய்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். நவீன் என்பவருக்கு வாகனத்தை விற்பனை செய்ததற்கான ரசீது என்னிடம் காட்டப்படுவதாகும். அது அ.சா.ஆ.15.

**<u>1, 4, 5 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**<u>3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-16** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : கண்ணபிரான் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 06th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் நாமக்கல், RMS enterprises என்ற இருசக்கர வாகனம் விற்பனை செய்யும் தனியார் நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். 2017 ம் வருடத்தில் TN 48 J 1796 என்ற 2007 மாடல் ஸ்பிளண்டர் வாகனத்தை முசிறி

அருகில் வசித்து வரும் அருள் என்பவரிடம் எக்ஸ்சேஞ்ச்க்கு எடுத்துவிட்டு, அவருக்கு புதிய வாகனத்தை கொடுத்தோம். TN 48 J 1796 என்ற இருசக்கர வாகனத்தை 24.04.2018 அன்று கரூர், அசோக் நகரை சேர்ந்த ஜெய்னுலாபுதீன் என்பவருக்கு ரூ.13,000/-க்கு விற்பனை செய்தோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர். அருள் என்பவர் பெயரில் போக்குவரத்து அலுவலகத்தில் பதிவாகியிருந்த வாகனத்தை பெயர் மாற்றம் செய்யாமலேயே ஜெய்னுலாபுதீன் என்பவருக்கு விற்பனை செய்தோம்.

**1, 4, 5 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்குக்கோப்புகளை படித்து, சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய காலஅவகாசம் தேவை எனவும், சாட்சி குறுக்கு விசாரணை செய்வதற்கு ஒத்தி வைக்க வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்படாமல், தள்ளுபடி செய்யப்பட்டது. குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-17** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெய்னுலாப்தீன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 06th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

முதல் விசாரணை

நான் கரூர், தாந்தோணிமலை அசோக் நகரில் வசித்து வந்து, பழைய வாகனங்களை வாங்கி விற்பனை செய்யும் வேலை செய்கிறேன். நான் நாமக்கல், RMS enterprises என்ற இருசக்கர வாகனம் விற்பனை செய்யும் ......

தனியார் நிறுவனத்திலிருந்து TN 48 J 1796 என்ற ஸ்பிளண்டர் வாகனத்தை 02.07.2020 அன்று வாங்கி, சதீஸ்குமார் என்பவருக்கு விற்பனை செய்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்குக்கோப்புகளை படித்து, சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய காலஅவகாசம் தேவை எனவும், சாட்சி குறுக்கு விசாரணை செய்வதற்கு ஒத்தி வைக்க வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்படாமல், தள்ளுபடி செய்யப்பட்டது. குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**மறு விசாரணை**

இல்லை.

ஓம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-18** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : சதீஸ்குமார் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 06th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் காந்திகிராமம், திண்ணப்பா நகரில் வசித்து வந்து, பழைய வாகனங்களை வாங்கி விற்பனை செய்யும் தொழில் செய்கிறேன். அ.சா.17 ஐ எனக்கு தெரியும். அவரிடமிருந்து நான் பத்து பழைய இருசக்கர வாகனங்களை

வாங்கினேன். அதில் TN 48 J 1796 என்ற ஸ்பிளண்டர் பிளஸ் வாகனத்தை வாங்கினேன். அந்த வாகனத்தை வேலாயுதம்பாளையத்தை சேர்ந்த மாயவன் என்பவருக்கு விற்பனை செய்தேன். அந்த வாகனத்தை பெயர் மாற்றம் செய்யாமல் அப்படியே விற்பனை செய்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**1, 4, 5 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்குக்கோப்புகளை படித்து, சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய காலஅவகாசம் தேவை எனவும், சாட்சி குறுக்கு விசாரணை செய்வதற்கு ஒத்தி வைக்க வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்படாமல், தள்ளுபடி செய்யப்பட்டது. குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**6 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-19** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : அருள் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 06th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், மகாதேவிபுரம் கிராமத்தில் வசித்து வந்து, விவசாயம் செய்கிறேன். TN 48 J 1796 என்ற ஸ்பிளண்டர் பிளஸ் வாகனம் என் பெயரில் வாங்கி, பதிவு செய்து, பயன்படுத்தி வந்தேன். அந்த

இருசக்கர வாகனத்தை 2017 ம் வருடத்தில் நாமக்கல் RMS Enterprises என்ற தனியார் நிறுவனத்தில் எனது பழைய வாகனத்தை ஒப்படைத்துவிட்டு, புதிய இருசக்கர வாகனம் வாங்கினேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்குக்கோப்புகளை படித்து, சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய காலஅவகாசம் தேவை எனவும், சாட்சி குறுக்கு விசாரணை செய்வதற்கு ஒத்தி வைக்க வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்படாமல், தள்ளுபடி செய்யப்பட்டது. குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**6 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-20** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : கோபாலகிருஷ்ணன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 06th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் வேலாயுதம்பாளையத்தில் வசித்து வந்து, தொழிற்பயிற்சி பயின்று வருகிறேன். என் அப்பா பெயர் நாகராஜன். அவர் இறந்துவிட்டார். நான் TN 47 AT 5008 என்ற TVS Sport என்ற இருசக்கர வாகனம் என் அப்பா பெயரில்

உள்ளது. என் அப்பா இறந்தபிறகு அந்த வாகனத்தை நான் பயன்படுத்தி வந்தேன். அந்த இருசக்கர வாகனத்தை எனது நண்பர் சூர்யா என்பவரிடம் ஓட்டுவதற்காக கொடுத்திருந்தேன். கல்லூரிக்கு சென்றுவருவதற்காக அவரிடம் ஒப்படைத்திருந்தேன். மேற்சொன்ன வாகனத்தை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து, இடைக்கால பொறுப்பில் வாங்கிச்சென்றேன். அதை நீதிமன்றத்தில் இன்று ஒப்படைக்கிறேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**6 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-21** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : சூர்யா | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 06th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் வேலாயுதம்பாளையத்தில் குடியிருந்து வந்து, தற்காலிக ஓட்டுநராக வேலை செய்கிறேன். அ.சா.20 என் நண்பர். TN 47 AT 5008 என்ற TVS Sport வாகனத்தை நான் பயன்படுத்தி வந்தேன். என் வீட்டிலிருந்த வண்டியை என்

நண்பர்கள் எடுத்துச்செல்வார்கள். 17.12.2020 அன்று எனது வீட்டிலிருந்த TN 47 AT 5008 என்ற TVS Sport வாகனத்தை யார் எடுத்துச்சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த வாகனம் என்ன ஆனது என்று எனக்கு தெரியாது.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

போலீசார் விசாரணையில் நான், கடந்த 17.12.2020 அன்று காலை 10.30 மணியளவில் எனது நண்பர் வேலாயுதம்பாளையம், காந்திநகர், பிரபு மகன் பிரசாந்த் என்பவர் எனக்கு போன் செய்து, கரூர் சென்று வர மேற்படி TVS Sport வண்டியை கேட்டார் என்றும், அதற்கு நான் என் அம்மாவிடம் சொல்லிவிட்டு எடுத்துச்செல்லுமாறு சொன்னேன் என்றும், அதன்பிறகு பிரசாந்த் என் அம்மாவிடம் சாவியை வாங்கி எடுத்துச்சென்றார் என்றும் சொன்னேன் என்றால் சரியல்ல. எதிரி பிரசாந்த் என் நண்பர். என் நண்பரை காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**6 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-22** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : நவீன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 06th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

முதல் விசாரணை

நான் வேலாயுதம்பாளையம் அரிமா சங்க ஆம்புலன்சில் ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 17.12.2020 அன்று நான் ஆம்புலன்ஸ் ஓட்டுநராக இருந்தேன். அன்றைய தினம் மதியம் நான் வீட்டில் ...........

சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது, என் உரிமையாளர் சக்தி என்பவர் எனக்கு போன் செய்து, மூலிமங்கலம் பிரிவுக்கு செல்லுமாறு கூறினார். நான் ஆம்புலன்ஸ் வாகனத்தில் மூலிமங்கம் பிரிவு ரோட்டிற்கு சென்றேன். அங்கு ஒரு நபர் உயிருக்கு போராடும் நிலையில் உடல் முழுவதும் சிதைந்த நிலையில் கிடந்தார். நான் அவரை எடுத்துக்கொண்டு, வேலாயும்பாளையம் அரசு மருத்தவமனைக்கு கொண்டு சென்றேன். அங்கிருந்து கரூர், அமராவதி மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். அமராவதி மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் வாகனத்திலேயே காயம்பட்ட நபரை பரிசோதித்த மருத்துவர், காயம்பட்ட நபர் இறந்துவிட்டார் என தெரிவித்தார். பின்னர், பிரேதத்தை வேலாயுதம்பாளையம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டு, அதன்பின்னர் கரூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்று, பிரேதத்தை பிணவறையில் வைத்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**6 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-23** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : சுரேஷ் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 06th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் வேலாயுதம்பாளையம் காந்திநகரில் குடியிருந்து, கொத்தனராக வேலை பார்க்கிறேன். அ.சா.14 நவீன்குமார் என் தம்பி. நான் TN 47 AQ 8502 என்ற பதிவு எண் கொண்ட பிளாட்டினம் வண்டி வைத்துள்ளேன். அந்த .........

வாகனம் என் பெயரில் பதிவாகியுள்ளது. நான் சுமார் மூன்று வருடங்களுக்கு முன்பு மீனாட்சிமஹாலில் வேலை செய்துக்கொண்டிருந்தபோது, மதியம் சுமார் 1.30 மணியளவில் இரண்டுநபர்கள் வந்து வண்டி கேட்டார்கள். அப்போது நான் நல்ல குடிபோதையில் இருந்தேன். நான் போதையில் இருந்ததால், யார் வண்டி கேட்டார்கள் என்று எனக்கு தெரியவில்லை. என் வண்டி வாகனத்தின் சாவியையும், என் தம்பி நவீன்குமாரின் வண்டி சாவியையும் கொடுத்து விட்டேன். அதன்பிறகு, இரண்டு மூன்று நாட்களாக வண்டியை காணவில்லை என வீட்டில் சத்தம்போட்டார்கள். அப்போது போலீசார் போன் செய்து, காவல்நிலையத்தில் வண்டி இருப்பதாக சொன்னார்கள். நான் சென்று பார்த்தேன்.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

போலீசார் விசாரணையில் நான், TN 47 AQ 8502 என்ற பிளாட்டினம் என்ற இருசக்கர வாகனம் எனக்கு சொந்தமானது என்றும், வேலாயுதம்பாளையம் காந்திநகரை சேர்ந்த முனியன் மகன் பிரசாந்த், பிரபு மகன் பிரசாத் ஆகியோர் என்னிடம் கட்டிட வேலை செய்துக்கொண்டிருந்தார்கள் என்றும், அவர்கள் அடிக்கடி என்னுடைய இருசக்கர வாகனத்தை எடுத்துச்செல்வார்கள் என்றும், 17.12.2020 அன்று எனக்கு சொந்தமான மேற்படி இருசக்கர வாகனத்தை, பிரபு மகன் பிரசாந்த் என்பவர் என் வீட்டிற்கு வந்து, என் அம்மா லெட்சுமியிடம் கடைக்கு சென்று வருவதாக கூறி எனது வாகனத்தை வாங்கிச்சென்றார் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் பிரசாந்த் மற்றும் பிரசாத் ஆகியோர் என் நண்பர் என்பதால் அவர்களை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**6 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.